# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 737 –1992 ඔක්තෝබර් මස 16 වැනි සිකුරාදා – 1992.10.16

737 ஆம் இலக்கம் - 1992 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | — |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | — |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 252 |
| மாகாண சபைகளின் நானாவித அறிவித்தல்கள் | — |
| பதவிகள் - வெற்றிடம் | 270 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 273 |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | — |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | — |
| நானாவித அறிவித்தல்கள் | — |


**கவனிக்க.**- (i) மாத்தறை அஹதியா கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலமும் அத்திடிய மந்திரிமுல்ல ஸ்ரீ தர்மாசோக விகாரஸ்த வித்தியாரக்ஷக சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலமும் 1992 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

(ii) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் (திருத்தம்) சட்டமூலமும் தாவர விலங்கினப் பாதுகாப்பு (திருத்தம்) சட்டமூலமும் 1992 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

(iii) இலங்கை பத்திரிகையாளர் ஒன்றியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலமும் பிலியந்தல தர்மசாஸ்த்ரோதய பிரிவென் விகாரஸ்த சங்வர்தன சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலமும் 1992 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

(iv) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுப் பாராளுமன்றத்தின் 1992 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கட்புல ஊனமுற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டமும் 1992 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி (திருத்தம்) சட்டமும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமும் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான "அறிவித்தல்" களுக்குக் கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும். வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவித்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 1992, ஒற்றோபர் 23 வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 1992, ஒற்றோபர் 09 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

நெவில் நாணயக்கார,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
1992 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் தேதி.

### ஆணைக்குழுவின் அலுவலர்களால் செய்துகொள்ளப்பட வேண்டிய சத்தியப்பிரமாணம்/ பிரகடனம்

மத்திய மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளராக/ அலுவலராகக் கடமைபுரிய வேண்டப்பட்டுள்ள ........ ஆகிய யான், ஆணைக்குழுவின் செயலாளர்/ அலுவலர் என்ற வகையிலான எனது கடமையின் போது அறியவருவதான கடமைரீதியான தகவல்கள், ஆவணங்கள், செய்திகள் என்பவற்றுள் அடங்கியுள்ள விடயங்களை முழுமையாகவோ, அன்றி அதன் ஒருபகுதியையோ, உத்தியோக அடிப்படையிலல்லாது வெளியிடமாட்டேன் என சத்தியம்/ உண்மையுடனும் நேர்மையுடனும் பிரகடனம் செய்கின்றேன்.

........................
கையொப்பம்.

இன்று ........ வருடம் ......... மாதம் ........... நாள் என் முன்னிலையில் சத்தியம்/ பிரகடனம் செய்யப்பட்டது.

........................
கூட்டு. ஊ. ஆணைக்குழுவின் தவிசாளர்.

10-325/1

---

எனது இல. மமாச/ ஏ/ 12/ 90 (VII)

### மத்திய மாகாண சபை

மேலே கூறப்பட்ட நியதிச் சட்டம், 1991, நவம்பர் மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற மத்திய மாகாண சபையின் சபைக் கூட்டத்தின் போது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதோடு, இல. ஜீசீபி/ ஏஎஸ்/ 3உம், 1992 ஜனவரி 8 ஆம் திகதியும் கொண்ட கடிதத்தின்படி அதற்கு மத்திய மாகாணத்தின் கௌரவ ஆளுநருடைய அங்கீகாரம் கிடைத்துள்ளது என இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பீ. ஆர். ரணசிங்க,
சபை செயலாளர்,
மத்திய மாகாண சபை.

சபைச் செயலகம்,
மத்திய மாகாண சபை,
த. பெ. 92,
பள்ளேகலை,
குண்டசாலை,
1992, ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி.

### மத்திய மாகாண மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 09 இலக்க விளையாட்டுக்கள் நியதிச் சட்டம்

**மாகாண விளையாட்டுக்கள் சபை, மாவட்ட விளையாட்டுக்கள் குழு, பெரும்பாக விளையாட்டுக்கள் குழு என்பவற்றை தாபிப்பதற்கெனவும், விளையாட்டுக்கள் நிதியம் ஒன்றினைத் தாபிப்பதற்கெனவும், விளையாட்டுக்கள் சம்பந்தமான அமைப்புகளை பதிவு செய்வதற்கெனவும் அவற்றை மேற்பார்வை செய்வதற்கெனவும், விளையாட்டுக்கள் புலமைப்பரிசில்களை வழங்கும் திட்டத்தினை தாபிப்பதற்கெனவும், விளையாட்டு அரங்குகளைத் தாபிப்பதற்கெனவும் ஏற்பாடுகளுக்காகவும், அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு நியதிச்சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு நிறைவேற்றப்படுவதாகுக.

1. இந்நியதிச்சட்டம் இலங்கையின் மத்திய மாகாண மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 09 இலக்க விளையாட்டுக்கள் நியதிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன ஆளுநர் நியமிக்கக் கூடியதான அவ்வாறான திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும். சுருக்கப் பெயர்.

2. இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக இதனைத் தொடர்ந்து வரும் ஏற்பாடுகளுக்கமைவாக— விளையாட்டுச் சபையொன்று ஆகியன தாபித்தல்.

(அ) ஒரு மாகாண விளையாட்டுக்கள் சபை ;

(ஆ) மூன்று மாவட்ட விளையாட்டுக்கள் குழுக்கள் ;

(இ) அமைச்சர் தீர்மானிக்கும்வாறான அத்தகைய பெரும்பாக விளையாட்டுக்கள் குழுக்கள் ;

(ஈ) "மாகாண விளையாட்டுக்கள் நிதியம்" என அழைக்கப்படுவதான விளையாட்டுக்கள் நிதியமொன்று ;

(உ) விளையாட்டுக்கள் புலமைப்பரிசில் திட்டம் ;

(ஊ) அமைச்சர் தீர்மானிக்கும்வாறான அத்தகைய விளையாட்டரங்கங்கள் என்பன தாபிக்கப்படலாம்.

விளையாட்டுப் பணிப்பாளரையும் ஏனைய உத்தியோகத்தர்களையும் நியமித்தல்.

3. (i) இந்நியதிச்சட்டத்தின்கீழ் அமைச்சரினால் வழங்கப்படும் அதிகாரங்கள், பொறுப்புக்கள் என்பவற்றை நிறைவேற்றுவதற்கென விளையாட்டுக்கள் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும்.

(ii) இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவ்வப்போது அவசியமெனக் கருதப்படுவதானவாறு விளையாட்டுக்கள் உதவிப் பணிப்பாளர் ஒருவர் அல்லது உதவிப் பணிப்பாளர்கள் அத்துடன் மற்றும் அலுவலர்களும் நியமிக்கப்படலாம்.

(iii) இப்பிரிவின் (i),(ii) உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் அலுவலர்களனைவரும் குற்றவியல் நடவடிக்கை முறைக்கோவையின் கருத்துக்குட்பட அரசு அலுவலர்களாகக் கணிக்கப்படல் வேண்டும்.

(iv) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நல்நோக்கத்திற்காக, மேற்கொண்ட அல்லது மேற்கொள்ளத்தவறிய எந்தவொரு விடயம் சம்பந்தமாகவும் அவ்வலுவலருக்கெதிராக வழக்குத் தொடர இயலாது.

(v) இப்பிரிவின் கீழ் நியமிக்கப்படும் அலுவலர்கள் தமது கடமைகள், தத்துவங்கள் என்பவற்றை நிறைவேற்றுகையில் அமைச்சரினால் அல்லது அமைச்சுச் செயலாளரினால் வழங்கப்படும், குறிப்பான அல்லது பொதுவான பணிப்புரைகளுக்கமைவாக அவற்றை நிறைவேற்றுதல் வேண்டும்.

## பாகம் I

### மத்திய மாகாண விளையாட்டுக்கள் சபை, மாவட்ட விளையாட்டுக் குழுக்கள், பெரும்பாக விளையாட்டுக்கள் குழு, என்பன தாபித்தல்

மத்திய மாகாண விளையாட்டுச் சபையைத் தாபித்தல்.

4. (1) விளையாட்டு, உடற்கல்வி, பொழுதுபோக்கு என்பவற்றின் உயர்ச்சி, அபிவிருத்தி, ஊக்குவிப்புத் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்காக இதனகத்துட்பின்னர் "சபை" எனக்குறிப்பீடு செய்யப்படும் "மத்திய மாகாண விளையாட்டுக்கள் சபை"யொன்று தாபிக்கப்படல் வேண்டும்.

(2) இச்சபையானது பின்வருபவர்களைக் கொண்டதாயமைதல் வேண்டும்:—

(அ) விளையாட்டுக்கள் அமைச்சின் செயலாளர்
(ஆ) மாகாண விளையாட்டுக்கள் பணிப்பாளர்
(இ) மாகாணக் கல்விப்பணிப்பாளர் (உடற்கல்வி)
(ஈ) இளைஞர் விவகார மாகாணப் பணிப்பாளர்
(உ) உள்ளூராட்சிப் பணிப்பாளர்
(ஊ) மாகாண சுகாதாரப் பணிப்பாளர்
(எ) அமைச்சரால் நியமிக்கபப்டும் ஏனைய பதினொரு அங்கத்தவர்கள்.

(3) (அ) விளையாட்டுக்கள் அமைச்சின் செயலாளர் இச்சபையின் தவிசாளராதல் வேண்டும்.

(ஆ) மாகாண விளையாட்டுக்கள் பணிப்பாளர் இச்சபையின் செயலாளராதல் வேண்டும்.

(4) "சபைக்கு" நியமிக்கப்படும் ஒருவர் வேறு மாகாணமொன்றின் விளையாட்டுக்கள் சபை/ விளையாட்டுக்கழகம்/ வேறு விளையாட்டு அமைப்பொன்றின் அங்கத்தவராயிருத்தல் ஆகாது.

(5) "சபையின்" நடவடிக்கைகள், கடமைகள், நடப்பெண் என்பன உபவிதிகள் மூலம் நிர்ணயிக்கப்படும்.

(6) "சபையின்" கூட்ட நடவடிக்கைகள், விடயங்கள் கையாளப்பட வேண்டிய முறைகள் சம்பந்தமான உபவிதிகளைச் சபை தானே அமைத்துக்கொள்ளலாம்.

சபையின் அங்கத்தவர்களின் பதவி வெற்றிடமும் அவர்களை பதவியிலிருந்து நீக்குதல் என்பனவும்.

5. (அ) சபையின் தவிசாளர் உட்பட அங்கத்தவர்கள் இறப்பு, பதவி விலகல், அல்லது பதவிநீக்கம் காரணமாக ஏலவே பதவி அகலாதவிடத்து நான்கு வருடங்களுக்குப் பதவி வகிக்கலாம்.

(ஆ) தான் அவ்வாறு செயற்படுதல் பயனுடையது எனக்கருதுமிடத்து அமைச்சர் தான் நியமித்த அங்கத்தவரெவரையும் காரணம் குறிப்பிடாது பதவி நீக்கலாம், அவ்வாறான பதவிநீக்கமொன்றிற்கெதிராக வழக்குத் தொடருதல், இயலாததாகும்.

(இ) இறப்பு, பதவி விலகல், பதவி நீக்கம் காரணமாக வெற்றிடமாகும் அங்கத்துவம் ஒன்றிற்காக வேறெவரும் நியமிக்கப்படுமிடத்து.. அவ்வாறு நியமிக்கப்பட்டவர் முன்னர் பதவி வகித்தவரின் எஞ்சிய காலப்பகுதிக்கு மட்டுமே அங்கத்துவம் வகிக்கலாம்.

**சபையில் சேவை யாற்றுவதற்குரிய தகுதியின்மைகள்.**

6. (அ) சித்த சுவாதீனம் அற்றவர் என நீதிமன்றமொன்றினால் தீர்ப்பளிக்கப்பட்ட அல்லது தீர்ப்பளிக்கப்படும் ஒருவர், அல்லது

(ஆ) கடன் தீர்க்க வகையற்றவர் அல்லது பொருள் நஷ்டப்பட்டவர் என தீர்ப்பளிக்கப்பட்ட அல்லது தீர்ப்பளிக்கப்படும் ஒருவர், அல்லது

(இ) நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ விளையாட்டு சாதனங்கள், உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள் என்பவற்றின், தயாரிப்பு, இணைப்பு அல்லது விற்பனை என்பவற்றில் தொடர்புடையவர் எனக்கருதப்படும் ஒருவர், அல்லது

(ஈ) இழி நடத்தைத் தொடர்பான குற்றமொன்றிற்காக நீதிமன்றமொன்றினால் தண்டிக்கப்பட்ட ஒருவர்.

இச்சபையின் அங்கத்தவராகும் தகுதியற்றவராதல் வேண்டும்.

**மீண்டும் தெரிவா வதற்கு அங்கத்தவர் ஒருவர் தகுதி யுடையவர் என்பன.**

7. பதவிக்காலம் முடிவடையும் முன்னர் பதவி விலகிய ஒருவர் மீண்டும் அங்கத்தவராகத் தெரிவாகத் தகுதியுடையவராவார்.

**பதில் கடமை புரிவதற்கு அங்கத்தவர்களை நியமித்தல்.**

8. சபையின் அங்கத்தவரொருவர், சுகயீனம், நாட்டிலிருந்து வெளியே வதிதல் அல்லது வேறு காரணங்களுக்காக தற்காலிகமாக பதவி வகிக்க இயலாதிருப்பின், அவ்வெற்றிடத்திற்காக வேறு அங்கத்தவரை அமைச்சர் நியமிக்கலாம்.

**மாவட்ட விளையாட்டுக்கள்.**

9. (1) விளையாட்டு, உடற்கல்வி, பொழுதுபோக்கு என்பவற்றின் உயர்ச்சி, அபிவிருத்தி, ஊக்குவிப்பு சம்பந்தமாக அமைச்சருக்கும் மாகாண விளையாட்டுக்கள் சபைக்கும் ஆலோசனை வழங்குவதற்காக அமைச்சர் குறித்த அறிவித்தல் மூலம் மத்திய மாகாணத்தின் மாவட்டங்களுக்கான விளையாட்டுக்கள் குழுக்களைத் தாபிக்கலாம்.

(2) (அ) மாவட்ட விளையாட்டுக்கள் குழு, தவிசாளர் ஒருவரையும் செயலாளர் ஒருவரையும், அமைச்சரால் நியமிக்கப்படும் பதினேழு அங்கத்தவர்களையும் கொண்டதாயமையும்.

(ஆ) குழுவின் தவிசாளராக, மாவட்ட அரசாங்க அதிபர் அல்லது அமைச்சரால் பெயர் குறித்துரைக்கப்படும் ஒருவர் பதவி வகித்தல் வேண்டும்.

(இ) மாவட்ட விளையாட்டுக்கள் அலுவலர் இக்குழுவின் செயலாளர் ஆதல் வேண்டும்.

(ஈ) மற்றய அங்கத்தவர்கள், கல்வித் திணைக்களம், (உடற்கல்வி) இளைஞர் விவகாரத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், உள்ளூர் விளையாட்டு அமைப்புக்கள் பெரும்பாக விளையாட்டுக்கள் குழுக்கள் என்பவற்றினின்றும் தெரிவாவர்.

**மாவட்ட விளையாட்டுக் குழுக்களின் நடவடிக்கைகள்.**

10. இந்நியதிச் சட்டத்திற்கமைவாக இக்குழுக்களின் கூட்ட விதிகள் நடப்பெண் என்பனவை உபவிதிகளினால் குறித்துரைக்கப்படல் வேண்டும்.

**மாவட்ட விளையாட்டுக் குழுக்களுக்குரிய உபவிதிகள்.**

11. சபையின் கூட்ட நடவடிக்கைகள், விடயங்களைக் கையாளும் முறைகள் சம்பந்தமாக உபவிதிகளைக் குழு தானே அமைத்துக் கொள்ளலாம்.

**அங்கத்தவர்களின் பதவி வெற்றிட மாதல்.**

12. (i) குழுவின் தவிசாளர் உட்பட அங்கத்தவர்கள் இறப்பு, பதவி விலகல், அல்லது பதவி நீக்கம் காரணமாக ஏலவே பதவி அகலாதவிடத்து நான்கு வருட காலத்திற்குப் பதவி வகிக்கலாம்.

(ii) தான் அவ்வாறு செயற்படுதல் பயனுடையது எனக்கருதுமிடத்து அமைச்சர் தான் நியமித்த அங்கத்தவரெவரையும் காரணம் குறிப்பிடாது பதவி நீக்கலாம். இவ்வாறான பதவி நீக்கமொன்றிற்கெதிராக வழக்குத் தொடருதல் இயலாததாகும்.

(iii) இறப்பு, பதவி விலகல், பதவி நீக்கம் காரணமாக வெற்றிடமாகும் அங்கத்துவம் ஒன்றிற்காக வேறெவரும் நியமிக்கப்படுமிடத்து. அவ்வாறு நியமிக்கப்பட்டவர் முன்னர் பதவி வகித்தவரின் எஞ்சிய காலப்பகுதிக்கு மட்டுமே அங்கத்துவம் வகிக்கலாம்.

அங்கத்தவர்களை மீண்டும் நியமித்தல்.

13. பதவிக்காலம் முடியும் முன்னர் பதவி விலகிய ஒருவர் மீண்டும் அங்கத்தவராகப் பதவி வகிக்கத் தகுதியுடையவராவார்.

பதிற் கடமை புரியும் அங்கத்தவர்கள்.

14. குழுவின் அங்கத்தவரொருவர், சுகயீனம், நாட்டினின்றும் வெளியே வதிதல் வேறு காரணங்களுக்காக தற்காலிகமாக பதவி வகிக்க இயலாதிருப்பின், அவ்வெற்றிடத்திற்காக வேறு அங்கத்தவரை அமைச்சர் நியமிக்கலாம்.

மாவட்ட விளையாட்டுக் குழுவொன்றில் அங்கத்தவர்களாக சேவை செய்வதற்கு தகுதியின்மைகள்.

15. (அ) சித்த சுவாதீனம் அற்றவர் என நீதிமன்றமொன்றினால் தீர்ப்பளிக்கப்பட்ட அல்லது தீர்ப்பளிக்கப்படும் ஒருவர் அல்லது

(ஆ) கடன் தீர்க்க வகையற்றவர் அல்லது பொருள் நஷ்டப்பட்டவர் என தீர்ப்பளிக்கப்பட்ட அல்லது தீர்ப்பளிக்கப்படும் ஒருவர் அல்லது

(இ) நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ விளையாட்டு சாதனங்கள், உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள் என்பவற்றின், தயாரிப்பு, இணைப்பு, அல்லது விற்பனை என்பவற்றில் தொடர்புடையவர் எனக்கருதப்படும் ஒருவர் அல்லது

(ஈ) இழி நடத்தைத் தொடர்பான குற்றமொன்றிற்காக நீதிமன்றமொன்றினால் தண்டிக்கப்பட்டவர்.

இச்சபையின் அங்கத்தவராகும் தகுதியற்றவராதல் வேண்டும்.

பெரும்பாக விளையாட்டுக் குழுக்கள்.

16. (1) விளையாட்டு, உடற்கல்வி, பொழுதுபோக்கு என்பவற்றின் உயர்ச்சி, அபிவிருத்தி, ஊக்குவிப்புக்காக அமைச்சருக்கும் மாவட்ட விளையாட்டுக்கள் குழுவுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்காக தேவையானது என அமைச்சர் கருதும் எண்ணிக்கையிலான பெரும்பாக விளையாட்டுக்கள் குழுக்களை அமைச்சரானவர் குறித்துரைத்துப் பிரசுரிப்பதன் மூலம் தாபிக்கலாம்.

(2) பெரும்பாக விளையாட்டுக்கள் குழுவானது—

(அ) பெரும்பாகச் செயலாளர்
(ஆ) விளையாட்டு அலுவலர்,
(இ) பெரும்பாகக் கல்விப்பணிப்பாளர்,
(ஈ) பிரிவுக் கல்வி அதிகாரி,
(உ) இளைஞர் சேவை அலுவலர்,
(ஊ) அமைச்சரால் நியமிக்கப்படும் ஏனைய பத்து அங்கத்தவர்களைக்

கொண்டதாயமைதல் வேண்டும்.

(3) பெரும்பாகச் செயலாளர் இக்குழுவின் தவிசாளராதல் வேண்டும்

(4) விளையாட்டலுவலர் இக்குழுவின் செயலாளராதல் வேண்டும்.

17. குழுவின் நடவடிக்கைகள், கடமைகள் நடப்பெண் என்பன உப விதிகள் மூலம் நிர்ணயிக்கப்படும்.

பெரும்பாக விளையாட்டுக் குழுக்களுக்குரிய உபவிதிகளை ஆக்குதல்.

18. குழுவின் கூட்ட நடவடிக்கைகள், விடயங்கள் கையாளப்பட வேண்டிய முறைகள் சம்பந்தமான உபவிதிகளை குழு தானே அமைத்துக் கொள்ளலாம்.

குழு அங்கத்தவர்களின் உத்தியோக அலுவல்களுக்குரிய காலம்.

19. குழுவின் அங்கத்தவர்கள் இறப்பு, பதவி விலகல் அல்லது பதவி நீக்கம் காரணமாக ஏலவே பதவி அகலாதவிடத்து நான்கு வருட காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

அங்கத்தவர்களை பதவியிலிருந்து விலக்குதல்.

20. (i) தான் அவ்வாறு செயற்படுதல் பயனுடையது எனக்கருதுமிடத்து அமைச்சர் தான் நியமித்த அங்கத்தவரெவரையும் காரணம் குறிப்பிடாது பதவி நீக்கலாம். அவ்வாறான பதவி நீக்கமொன்றிற்கெதிராக வழக்குத் தொடருதல் இய்லாததாகும்.

(ii) இறப்பு, பதவிவிலகல், பதவிநீக்கம் காரணமாக வெற்றிடமாகும் அங்கத்துவம் ஒன்றிற்காக வேறெவரும் நியமிக்கப்படுமிடத்து. அவ்வாறு நியமிக்கப்பட்டவர் முன்னர் பதவி வகித்தவரின் எஞ்சிய காலப்பகுதிக்கு மட்டுமே அங்கத்துவம் வகிக்கலாம்.

21. பதவிக்காலம் முடியும் முன்னர் பதவி விலகிய ஒருவர் மீண்டும் அங்கத்தவராக நியமிக்க தகுதியுடையவராதல் வேண்டும்.

22. குழுவின் அங்கத்தவரொருவர், சுகயீனம், நாட்டினின்றும் வெளியே வதிதல் அல்லது வேறு காரணங்களுக்காக தற்காலிகமாக பதவி வகிக்க இயலாதிருப்பின், அவ்வெற்றிடத்திற்கு வேறு ஆள் ஒருவரை அமைச்சர் நியமிக்கலாம்.

23. (அ) சித்த சுவாதீனம் அற்றவர் என நீதிமன்றமொன்றினால் தீர்ப்பளிக்கப்பட்ட அல்லது தீர்ப்பளிக்கப்படும் ஒருவர் ; அல்லது பெரும்பாகக் குழுவொன்றில் அங்கத்தவர்களாகச் சேவை ஆற்றுவதற்குரிய தகுதியின்மைகள்.

(ஆ) கடன் தீர்க்க வகையற்றவர், அல்லது பொருள் நஷ்டப்பட்டவர் என தீர்ப்பளிக்கப்பட்ட அல்லது தீர்ப்பளிக்கப்படும் ஒருவர்; அல்லது

(இ) நேரிடையாகவோ, அல்லது மறைமுகமாகவோ விளையாட்டு சாதனங்கள், உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள் என்பவற்றின், தயாரிப்பு, இணைப்பு, அல்லது விற்பனை என்பவற்றில் தொடர்புடையவர் எனக்கருதப்படும் ஒருவர் ; அல்லது

(ஈ) இழி நடத்தைத் தொடர்பான குற்றமொன்றிற்காக நீதிமன்றமொன்றினால் தண்டிக்கப்பட்டவர் ஒருவர்

இச்சபையின் அங்கத்தவராகுதற்கு தகுதியற்றவராதல் வேண்டும்.

24. மாகாண விளையாட்டுச் சபையிலும் மாவட்ட, பிராந்திய விளையாட்டு, குழுக்களிலும் வேலைகள், ஒழுங்காற்று நடவடிக்கைகள் என்பனவற்றை நிருவாகம் செய்வதற்காக அமைச்சர் ஒழுங்கு விதிகளை இயற்றலாம், அத்துடன் இவற்றை மாகாண சபைக்கு சமர்ப்பித்து நிறைவேற்றப்படற்பாலதாதல் வேண்டும். ஒழுங்காற்று நடவடிக்கைகளுக்குரிய நிருவாகம்.

25. பாராளுமன்ற உறுப்பினர்கள் ; மாகாண சபை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், நகர சபை பிரதேச சபை அங்கத்தவர்கள் ஆகிய செயற்பாட்டு அரசியலாளர்களை மாகாண விளையாட்டுச் சபைகள் மாவட்ட, பிராந்திய விளையாட்டுக் குழுக்களுக்குரிய அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்படலாகாது. குழுக்களுக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல்.

## பாகம் II

### மாகாண விளையாட்டுக்கள் நிதியமொன்றினைத் தாபித்தலும் நிர்வகித்தலும்

26. மத்திய மாகாணத்தில் விளையாட்டுத்துறை உயர்ச்சி அபிவிருத்தி என்பவற்றிற்காக இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக்குறிப்பீடு செய்யப்படுவதான மத்திய மாகாண விளையாட்டுக்கள் நிதியம் ஒன்று தாபிக்கப்படல் வேண்டும். மாகாண விளையாட்டு நிதியம் ஒன்று தாபித்தல்.

27. (1) (அ) மத்திய அரசினால் அவ்வப்போது வழங்கப்படும் மானியங்கள், நிதியத்திற்கு சேர்க்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள்.

(ஆ) இந்நிதியத்திற்காக மாகாண சபையினால் அவ்வப்போது ஒதுக்கப்படும் எல்லா ஒதுக்கீடுகளும்,

(இ) வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் எல்லா உதவிப்பணங்களும்,

(ஈ) இந்நிதியத்திற்காக வழங்கப்படும் எல்லா தனிப்பட்டோர் நன்கொடைகளும்,

(உ) வேறு வகையாகப் பெறப்படும் எல்லாப் பணத்தொகைகளும்,

இந்நிதியத்திற் சேர்க்கப்படல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (இ), (ஈ), (உ) வகைகளால் குறித்த நோக்கத்திற்காக மாத்திரம் பயன்படுத்தவென வழங்கப்படுவதான நன்கொடைகளை இந்நிதியத்திற்காக ஏற்றுக்கொள்ளல் அமைச்சரின் சுயநிர்ணயித்தின் பேரில் நடைபெறுதல் வேண்டும்.

(3) மேலும் அமைச்சரின் சுயதீர்மானத்தின் பேரில் நன்கொடை அல்லது பரிசில் வழங்குவதற்கோ, அன்றிக்குறித்த ஒரு நோக்கத்துக்காகவோ ஏற்கப்பட்ட நன்கொடைகள் இந்நிதியத்திற் சேர்க்கப்படலாகாது. அவற்றிற்கான கணக்குகள் வேறாகப் பேணப்படல் வேண்டும்.

(4) 3 வது உபவாசகத்தின் கீழ் நிதியத்திற்கு வரவிடாமல் அமைச்சரின் அபிப்பிராயப்படி வேறாக ஒதுக்கி வைத்திருக்கும் நிதி பற்றிய நிருவாக ஒழுங்கு விதிகளை ஏற்பாடு செய்து, அவற்றை மாகாண சபை நிறைவேற்றப்படற்பாலதாதல் வேண்டும்.

28. இந்நிதியத்திற்காக நன்கொடையாக வழங்கப்படும் அசையும் அசையாத சொத்துக்களை நிதியத்தின் சார்பாக இந்நியதிச்சட்டத்திற்கமைவாகப் பயன்படுத்தற்பொருட்டு அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்படலாம். அவ்வாறு ஏற்கப்படும் சொத்துக்கள் அமைச்சரின் சுயநிர்ணயத்தின் பேரில் அமைச்சரால் ஏற்பாடு செய்யப்படும் வகையில் விற்பனை செய்து அதனால் பெறப்படும் தொகை இந்நிதியத்தின் வரவில் சேர்க்கப்படலாம். அசையும், அசையாத சொத்துக்களின் நன்கொடைகள்.

29. (i) இந்நிதியம் அமைச்சரின் கட்டுப்பாடு, நிர்வாகம் என்பவற்றின் கீழ் அமையும் எனினும் அமைச்சரின் பணிப்பிற்கமைய அமைச்சுச் செயலாளர் இதனை நிர்வகிப்பார். நிதியத்தின் நிருவாகம்.

(ii) இந்நிதியத்தின் நிர்வாகத்தில், மத்திய மாகாண விளையாட்டுக்கள் சபை தனது ஆலோசனைகளை வழங்குதல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு ஆண்டிறுதியின் பின்னரும் இயலுமான கெதியில் அமைச்சுச் செயலாளர் இந்நிதியத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல் வேண்டும்.

(iv) அமைச்சுச் செயலாளர், இந்நிதியம் சம்பந்தமான விரிவான வரவு செலவுக் கணக்கொன்றை வருடாந்தம் பேணுவித்தல் வேண்டும்.

(v) இந்நிதியத்தின் நிதிவிடயம் சம்பந்தமாக, 1971 ஆம் ஆண்டின் நிதிச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு தேவையான மாற்றங்களுடன் பயன்பாடுடையதாதல் வேண்டும்.

(vi) இந்நிதியத்தின் நிதியாண்டு கலண்டர் ஆண்டோடொத்தமைதல் வேண்டும்.

நிதியம் பற்றிய அறிக்கை.

30. இந்நிதியத்தின் வருடாந்த நிர்வாக அறிக்கை கணக்கறிக்கை, கணக்காய்வாளர் நாயகத்தின் ஆய்வறிக்கை என்பன ஒவ்வொரு ஆண்டிறுதியின் பின்னரும் இயலுமான கெதியில் மத்திய மாகாண மாகாண சபையின் முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நிதியத்தினால் கொடுக்கற்பாலதான கொடுப்பனவுகள்.

31. அமைச்சரானவர்—

(அ) மத்திய மாகாணத்தின் விளையாட்டுத்துறை அபிவிருத்தி உயர்ச்சி, ஊக்குவிப்பு என்பவற்றிற்காகவும்,

(ஆ) விளையாட்டுத்துறைக்கு விஷேடமாக பங்களிப்பை செய்தவரெனக்கருதப்படும் மூத்த விளையாட்டு வீரரொருவருக்கான கௌரவக் கொடுப்பனவாகவும்,

(இ) வங்கியொன்றில் அல்லது அரச நிதித்தாபனம் ஒன்றில் நிரந்தர வைப்புப்பணமாக வைப்பு செய்வதற்காகவும்,

(ஈ) இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அல்லது அந்நோக்கங்களுக்கு வலுவமைப்பதற்காக

இந்நிதியத்தினின்றும் கொடுப்பனவு மேற்கொள்ளலாம்.

## பாகம் III

### விளையாட்டுச் சங்கங்கள், கழகங்கள் என்பவற்றைப் பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்

விளையாட்டு அல்லது ஒரே இன விளையாட்டுக்களை பெயர் குறிப்பிடல்.

32. அமைச்சர், வர்த்தமானப்பத்திரிகை மூலம் வெளியிடும் அவ்வாறான விளையாட்டு, அல்லது விளையாட்டுக்களுக்காக மாகாண மட்டத்திலான சங்கங்கள் தாபிக்கப்படலாம்.

மாகாண விளையாட்டுச் சங்கங்களை பதிவு செய்தல்.

33. இதன் 32 ஆம் பிரிவிற்கமைய விளையாட்டு அல்லது விளையாட்டுக்கள் குறித்து பிரசுரிக்கப்படுமிடத்து, அவ்வாறான பிரசுரிக்கப்படும் சமயத்து இயங்கி வரும் எல்லா விளையாட்டு அல்லது விளையாட்டுக்கள் சங்கங்களும் பதிவுசெய்துகொள்வதற்கான விண்ணப்பங்களை உரிய முறையில் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறே பின்னர் அமையும் எல்லா விளையாட்டு அமைப்புக்களும் பதிவிற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

பதிவு செய்தல் தீர்மானங்கள் பற்றிய மேன்முறையீடுகள்.

34. பதிவு செய்தல் தொடர்பாய் எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்லது முடிவு என்பவற்றால் தான் பாதிப்பிற்குள்ளாக்கப்பட்டுள்ளதாய்க் கருதும் ஒரு ஆள் அவ்வாறான நடவடிக்கை முடிவு என்பவற்றிற்கெதிராக அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம் இதன் பேரில் அமைச்சரின் முடிவானது இறுதியானதாகும்.

மாகாண விளையாட்டு சங்கங்கள் பதிவு செய்தல் விதி முறைகளும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு சங்கமொன்றின் தத்துவங்களும் செயற்பாடுகளும்.

35. (அ) விளையாட்டுக்கள் தொடர்பான அமைப்புக்களைப் பதிவு செய்வதற்கான விதிமுறைகள் அறவிடப்படும் கட்டணம்.

(ஆ) விளையாட்டு அமைப்புக்களுக்கான யாப்பினை அமைத்தல்.

(இ) அவ்வாறான சங்கங்கள் கழகங்கள் அமைப்புக்களின் கடமைகள், தத்துவங்கள் செயற்பாடுகள்.

(ஈ) அவ்வாறான சங்கங்கள் அமைப்புக்களின் செயற்பாடுகளுக்கெதிராக மேன்முறையீடு செய்வதற்கான விதிமுறைகள்.

(உ) நடுவர்கள், மத்தியஸ்தர்கள், தீர்ப்பாளர்கள், பயிற்றுவிப்போர் என்பவர்களை நியமிப்பதற்கான விதிமுறைகள் என்பவை தொடர்பான விடயங்களை அமைச்சர் உபவிதிகள் மூலம் வகுத்தமைக்கலாம்.

36. (அ) சங்கமொன்றின் அல்லது அமைப்பொன்றின் அங்கத்தவர்களின் பிழையான நடத்தை அல்லது ஒழுங்கீனம் என்பவற்றை நிவர்த்தித்துக்கொள்வதற்காக செயலாளரினால் அறிவித்தல் கொடுக்கப்பட்டும் அவ்வறிவுறுத்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கத்தவறும், அல்லது உதாசீனம் செய்யும் அவ்வாறான சங்கமொன்றின் அல்லது அமைப்பொன்றின்; அல்லது பதிவுசெய்தலை மறுத்தல் இடை நிறுத்துதல், நீக்கிவிடுதல் என்பன.

(ஆ) அமைச்சின் கொள்கைகளை அமுல் செய்யத்தடையாயிருக்கும் அல்லது ஒத்துழைக்க மறுக்கும், அல்லது செயலற்றிருக்கும் சங்கம் அல்லது அமைப்பொன்றின் ; அல்லது

(இ) தனக்குரித்தான கடமைகளையும் செயற்பாட்டினையும் மேற்கொள்ளாதிருக்கும் சங்கம் அல்லது அமைப்பொன்றின் பதிவிற்கான விண்ணப்பத்தை அமைச்சர் ஏற்க மறுக்கலாம், இடைநிறுத்தலாம் அல்லது நீக்கிவிடலாம்.

37. பதிவை ஏற்கமறுத்த அல்லது இடைநிறுத்திய அல்லது நீக்கிவிட்ட சங்கமொன்றின் கடமையை தொடர்ந்து மேற்கொள்வதற்காக அமைச்சர் இடைக்கால ஏற்பாடொன்றினை செய்யலாம். இடைக்கால ஏற்பாடு ஒன்றை செய்தல்.

38. இதன் 37 ஆம் பிரிவிற்கமைய உரியமுறையில் விண்ணப்பிக்கத் தவறிய அல்லது 36 ஆம் பிரிவின்படி பதிவு ஏற்க மறுக்கப்பட்ட இடைநிறுத்தப்பட்ட அல்லது நீக்கப்பட்ட சங்கம் அல்லது அமைப்பினைக் களைத்து விடுவதற்கான உத்தரவை அமைச்சர் பிறப்பிக்கலாம். அவ்வாறான உத்தரவின் பேரில் சங்கத்தின் உத்தியோகத்தர்கள் குறித்த கால எல்லைக்குள் சங்கத்தைக்களைத்து அதன் நடவடிக்கைகளை முடிவுறச் செய்தல் வேண்டும். மாகாண விளையாட்டுச் சங்கங்களை கலைத்தல்.

39. இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பதிவுசெய்து கொள்ளப்படாத எந்தவொரு சங்கமும் கழகமும், இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக வழங்கப்படும் உதவிகள் வசதிகள் நன்கொடைகள் என்பவற்றிற்கு உரிமையுடையதாகமாட்டா.

40. அமைச்சர் தான் அவ்வாறு செயற்படுதல் பயனுடையது எனக் கருதுமிடத்து ஒரு சங்கத்தினைக் கலைப்பதற்காக வழங்கிய உத்தரவை இரத்துச் செய்யலாம். அத்துடன் அச்சங்கத்தின்பால் காணப்பட்ட ஒழுங்கீனம், ஒழுக்கவீனம், தவறான நடத்தை என்பவற்றை நிவர்த்தித்துக்கொள்வதற்கு தகுந்ததெனச் செயலாளரால் வகுக்கப்படும் முறைப்படியானவாறு அவற்றை நிவர்த்தித்துக் கொள்ளுமாறு பணிக்கலாம். குறைகள் நிவர்த்திக்கப்பட்டதன் பேரில் அமைச்சர் சுயநிர்ணயத்தின் பேரில் அவ்வாறான சபையை மீளப்பதிவு செய்யுமாறு அல்லது பதிவு செய்யுமாறு பணிக்கலாம். கலைத்தல் உத்தரவு ஒன்றை பயனுடையது என உத்தரவு பிறப்பிக்க முடியுமான தத்துவம்.

## பாகம் IV

### விளையாட்டுக்கள் புலமைப் பரிசுத்திட்டமொன்றினைத் தாபித்தல்

41. (அ) விளையாட்டு, உடற்கல்வி என்பவற்றில் அறிவையும் ஆற்றலையும் ஏற்படுத்தற்காகவும். விளையாட்டுக்களுக்குரிய புலமைப் பரிசில்களை வழங்குதல்.

(ஆ) விளையாட்டுத்துறையில் ஆற்றல் கொண்டவர்களின் பெற்றோர்மீது சாரும் சுமையையும் வியாகூலத்தையும் அகற்றுவதற்கெனவும்.

(இ) விளையாட்டுத்துறையில் மறைந்துள்ள ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அபிவிருத்தி செய்தற்கெனவும்.

(ஈ) விளையாட்டுத்துறையில் ஆற்றல் கொண்டவர்களை அத்துறையில் இலாபகரமான தொழில் வாய்ப்பின்பால்படுத்தவும்.

(உ) திறமைகொண்டோரை உரியவயதில் அதியுயர்ந்த செயற்திறன் கொண்டோராக்குதல் பொருட்டும் விஞ்ஞான ரீதியான பயிற்சிகளைப்பெற்றுத் தருதல் பொருட்டும் அமைச்சர் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட புலமைப்பரிசில்களைத் தாபிக்கலாம்.

42. (அ) புலமைப்பரிசுக்கான தெரிவுத் திட்டம். உப விதிகள்.

(ஆ) வழங்கப்படும் விளையாட்டுப் புலமைப்பரிசுகளின் பெறுமதி.

(இ) தொடர்பதிகாரிகள், விரிவுரையாளர்கள், பயிற்றுனர் ஆசிரியர்கள், மற்றும் அலுவலர்களை நியமித்தல், வேதனம் வழங்கல், பயிற்சிநெறி, கற்கைநெறி, பரீட்சைகள், பரீட்சை முடிவுகள் என்பன தொடர்பாக அமைச்சர் உபவிதிகளை வகுத்தளிக்கலாம்.

வசதிகளைச் செய்து கொடுத்தலும் ஏனையவையும் பற்றிய அமைச்சருக்குள்ள தத்துவங்கள்.

43. (அ) புலமைப்பரிசு வழங்கப்பட்ட கல்வி நிலையம், அல்லது பாடசாலையில் பயிற்சிக்காகவும், தங்குவசதிக்காகவும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவும், கட்டிடங்கள் அமைக்கவும் அவற்றை பேணவும், அவற்றிற்கான உபகரணம் வழங்கவும் நிலத்தை ஒதுக்கியமைக்கவும்

(ஆ) புலமைப்பரிசு பெற்ற மாணவர்களைக் கொண்ட கல்வி நிலையம், அல்லது பாடசாலையில் அம்மாணவர்களுக்கான ஒழுக்கம், நலம்புரி சேவைகளுக்காகவும், பயிற்சியளிக்கும் அலுவலர்களின் நலனுக்காகவுமான ஏற்பாடுகளைச் செய்யவும்

(இ) அவ்வாறான புலமைப்பரிசில் பெற்ற மாணவர்களின் சேர்வுக்கான ஏற்பாடுகளை அவ்வாறான கல்வி நிலையம் அல்லது பாடசாலையில் மேற்கொள்ளவும்

அமைச்சர் தத்துவம் கொண்டவராதல் வேண்டும்.

விளையாட்டு அரங்கு, விளையாட்டுத் தொகுதி என்பவற்றைத் தாபித்தல்.

44. பயிற்சி, போட்டி, உடற்கல்வி, பொழுது போக்கு என்பவற்றின் உயர்ச்சி, அபிவிருத்தி ஊக்குவிப்பு எனும் நோக்கங்களுக்காக இதனகத்துப் பின்னர் "விளையாட்டரங்கு" எனக் குறிப்பீடு செய்யபடுவதான விளையாட்டு மைதானம் விளையாட்டுப் பூமி, விளையாட்டரங்கம், விளையாட்டரங்கத்தொகுதி என்பவற்றை அமைச்சர் தாபிக்கலாம், அல்லது தாபிப்பதற்கு ஆதரவாளராயிருக்கலாம்,

நிதியம் முதலீடு செய்தல்.

45. அவ்வாறான விளையாட்டரங்குகள் அமைத்தல் அல்லது தாபித்தலுக்காக

(அ) மத்திய அரசின் ஒதுக்கீடு,
(ஆ) மாகாண சபையின் ஒதுக்கீடு,
(இ) வெளிநாடுகளினின்றும் பெறப்படும் நன்கொடைகள்,.
(ஈ) நன்கொடைகள்,
(உ) வேறு வகைகளால் பெறப்படும் நிதி

என்பவை மூலம் முதலீடு செய்யப்படல் வேண்டும்.

கட்டிடங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

46. அவ்வாறான விளையாட்டரங்கங்களில், தங்கு வசதிக்காகவும் பிறநோக்கங்களுக்காகவும் கட்டிடமெதனையும், அமைக்க அல்லது அமைப்பிக்க, தாபிக்க அல்லது தாபிதப்படுத்த, நடாத்த அல்லது நடாத்துவிக்க வசதிகள் ஏற்படுத்த வசதிகள் ஏற்படுத்துவிக்க அமைச்சர் தத்துவம் கொண்டவராதல் வேண்டும்.

உபவிதிகள்.

47.(அ) விளையாட்டரங்கங்களிற்கான நிர்வாக, மற்றும் தொழில்நுட்ப அல்லது ஏனைய அலுவலர்களை நியமிக்கவும் அவர்களுக்கான வேதனங்களைத் தீர்மானிக்கவும்,

(ஆ) விளையாட்டரங்கங்களின் உள்ள வசதிகளைப் பயன்படுத்துதல்,

(இ) விளையாட்டரங்கங்களில் பாவிக்கப்படும் உபகரணங்களின் பாதுகாப்புத்தரத்தினை வரையறுத்தல் எனும் விடயங்கள் தொடர்பாக அமைச்சர் உபவிதிகள் வகுத்தளிக்கலாம்.

## பாகம் V

### பொது

அமைச்சரின் விசேட அல்லது பொதுவான பணிப்புரைகள்.

48. (i) இந்நியதிச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதும் பதிவு செய்யப்பட்டதுமான, சபை குழு, சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள் என்பவற்றின் கடமைகள், தத்துவங்கள், செயற்பாடுகள் என்பவற்றை மேற்கொள்வதற்காக அமைச்சர் பொதுவானதும் குறித்துரைக்கப்பட்டதுமான பணிப்புக்களை வழங்கலாம். அவ்வாறு வழங்கப்படுவதான பணிப்புரைகளை, சபை, குழு, சங்கங்கள் அமைப்புக்கள் என்பன ஏற்றொழுகல் வேண்டும்.

(ii) இந்நியதிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதும் பதிவு செய்யப்பட்டதுமான சபை, குழு, சங்கங்கள் என்பவற்றின், ஆதனங்கள் அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சர் கணக்கறிக்கை அல்லது பொது அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பணிக்கலாம். அவ்வாறு பணிக்கப்படும் சபை, குழு, சங்கம் என்பன அவ்வாறான பணிப்புரைக்கு பணிந்தொழுகல் வேண்டும்.

(iii) இந்நியதிச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதும் பதிவு செய்யப்பட்டதுமான சபை, குழு, சங்கங்கள், அமைப்புக்கள் என்பவற்றின் சகல விடயங்கள் தொடர்பாகவும் அல்லது குறித்த ஏதேனும் விடயம் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் குறித்த ஆள் ஒருவரையோ அல்லது ஆட்களையோ

பெயர் குறித்து நியமிக்கலாம். அமைச்சர் அவ்வாறு நியமிக்குமிடத்து குறித்த சபை, குழு, சங்கம் அல்லது அமைப்பு அவ்விசாரணைக்கான சகல வசதிகளையும் செய்து கொடுப்பதுடன் விசாரணைக்கவசியமான ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

49. மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டு வீரர் அல்லது விளையாட்டுக்குழுக்கள், தேசிய மட்டத்தில் அல்லது பிறநாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றல் சம்பந்தமான ஒழுங்குவிதிகளை அமைச்சர் உபவிதிகள் மூலம் தொகுத்தளிக்கலாம்.

50. வேலை வழங்குனர் ஒருவரால் அல்லது அதிகார சபையொன்றினால் அல்லது உள்ளூராட்சி சபையொன்றினால் வழங்கப்படவேண்டியதான குறைந்தபட்ச பொழுதுபோக்கு வசதிகள் யாவை என்பதனை அமைச்சர் உபவிதிகள் மூலம் வகுத்தளிக்கலாம்.

51. (i) இந்நியதிச் சட்டம் தேவைப்படுத்துவதான விடயங்கள் தொடர்பாகவும், இதன் ஏற்பாடுகள் நோக்கங்கள் என்பவைக்காகவும் இந்நியதிச்சட்டத்தின் செயற்பாட்டிற்கு அவசியமெனக் கருதப்படுவதான விடயங்கள் தொடர்பிலும் அமைச்சர் உபவிதிகளை ஆக்கலாம்.

(ii) அமைச்சரினால் ஆக்கப்படும் உபவிதிகள் யாவும் ஏற்புடைய பிரசுரமொன்றின் மூலம் அறிவிக்கப்படல் வேண்டும். பிரசுரமான உபவிதிகள் அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்தோ அல்லது பிரசுரத்தில் குறிப்பிடப்படும் திகதியொன்றிலிருந்தோ நடைமுறைக்கு வருதல் வேண்டும். பிரசுரிக்கப்பட்ட உபவிதிகள் அவ்வாறான பிரசுரிப்பின் இயலுமான உடன்கெதியில் மாகாண சபையின் அனுமதிக்காக மாகாண சபைமுன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மாகாணசபையின் அனுமதி மறுக்கப்பட்ட உபவிதிகள் அனுமதி மறுக்கப்பட்ட திகதியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும் எனினும் இடைப்பட்ட காலத்தில் மேற் கொள்ளப்பட்ட கருமங்களை இது பாதிக்கமாட்டா. அமைச்சரால் ஆக்கப்பட்ட உபவிதிகள் மாகாண சபையின் அனுமதி மறுக்கப்பட்டதனால் நீக்கப்படுமிடத்து அது சம்பந்தமாக ஏற்புடைய பிரசுரமொன்றின் மூலம் அறிவிக்கப்படல் வேண்டும்.

52. ''மாகாண விளையாட்டுக்கள் சபை'' அங்கத்தவர்களுக்கான வேதனம், வேதனம் வழங்கும் வகை என்பன சம்பந்தமாக அமைச்சர் நிதி விடயத்துக்கும் பொறுப்பான அமைச்சரின் அனுசரணையுடன் ஏற்ற தீர்மானத்தினை மேற்கொள்ளலாம்.

53. இந்நியதிச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய— பொருள் கோடல்.

''அமைச்சர்'' எனப்படுபவர், விளையாட்டுக்கள் விடயத்திற்கும் அல்லது விளையாட்டுத் தொடர்பான கடமைகளை மேற்கொள்ளவும் மத்திய மாகாண மாகாண சபையின் பிரதான அமைச்சரால் நியமிக்கப்படும் ஒருவராகும்.

''செயலாளர்'' மத்திய மாகாண மாகாண சபையின் விளையாட்டுக்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளராவார்.

''விளையாட்டு'' அல்லது ''விளையாட்டுக்கள்'' எனப்படுவது எவ்வகையிலுமான, விளையாட்டுக்கள், ஆட்டங்கள், பொழுதுபோக்குகள் உடற்பயிற்சி, மெய்வல்லுனர் பயிற்சி பயிற்சிகளுமாகும்'' அவை அமைச்சுச் செயலாளரால் இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாட்டிற்காக விளையாட்டுகள் என ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து.

''சங்கங்கள்'' எனப்படுவது மாகாணத்திற்குட்பட்ட குறித்த ஒரு பூகோள எல்லைக்குள் குறித்த விளையாட்டுக்களின் உயர்ச்சி அபிவிருத்தி மேம்பாடு ஏன்பவற்றிற்காக தாபிக்கப்படும் ஒரு அமைப்பாகும்.

''கழகம்'' எனப்படுவது குறித்த ஒரு கிராம மட்ட எல்லைக்குள் விளையாட்டுக்களின் உயர்ச்சி, அபிவிருத்தி ஊக்குவிப்பு எனும் நோக்கத்திற்காக தாபிக்கப்படும் ஆரம்பநிலை அமைப்பாகும்.